بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)**

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 12.06.15 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 12, June 2015 (Tamil)**

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

**அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவு கூறுதல், அவற்றைப் பறைசாற்றுதல் ஆகியவை முன்னரை விட அதிகமாக அவசியமாகும். இதுதான் பிறகு நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வைப் பற்றிய அன்பை உருவாக்குகிறது. அல்லாஹ்வின் அருளும் அருட்கொடைகளும் மேலும் அதிகமாகும் பொருட்டு அவனுக்குக் கட்டுப்படுவதற்கும் கீழ்ப்படிவதற்கும் ஓர் ஆர்வத்தை உருவாக்குகிறது. எனவே ஜெர்மனியின் ஆண்டு மாநாடு மற்றும் பிற நிகழ்ச்சிகளில் அல்லாஹ்வின் அருள்கள் வெளிப்பட்டன. அந்த அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு அல்லாஹ்வின் பக்கம் அதிகமாக குனிய வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருள்கள் மேலும் அதிகமாகிக் கொண்டிருக்கும்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** மனிதன் எல்லா நேரமும், எல்லா நிலைமையிலும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். இரண்டாவது, ***அம்மா பினிஃமத்தி ரப்பிக ஃபஹத்திஸ்*** என்பதன்படி செயல்பட வேண்டும். இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடைகளை பறைசாற்றிக் கொண்டிருக்க வேண்டும். இதனால் இறைவனைப் பற்றிய அன்பு அதிகமாகிறது. மேலும் அவனைப் பற்றிய அன்பு உருவாகிறது.

**ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளை நாம் அன்றாடம் கண்டு வருகின்றோம். ஆனால் நான் சுற்றுப் பயணத்தில் செல்லும்போது அல்லாஹ்வின் அருள்கள் பல மடங்கு அதிகமாகி விடுகின்றன. அல்லாஹ் தனது அருளால் நிகழ்ச்சிகளில் அருள்களை வழங்கி விடுகிறான். தப்லீக் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியும் பெருமளவில் மக்கள் வரை சென்றடைகின்றது. பிறகு மக்களிடம் அதன் தாக்கமும் அதிகமாக ஏற்படுகிறது. சென்ற நாட்களில் ஜெர்மனி சுற்றுப்பயணத்தில் நான் சென்றிருந்தபோது உண்மையான நோக்கம் ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் அத்துடன் அல்லாஹ்வே இஸ்லாத்தின் உண்மையான அறிமுகம் மற்றும் போதனையை மக்கள் வரை சென்றடைய வைப்பதற்குக் காரணியாக அமையும் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் செய்து விடுகிறான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, மனிதன் எந்நிலையிலும் துஆவை வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். நிச்சயமாக அது இல்லாமல் நாம் ஓர் அடி கூட எடுத்து வைப்பது சாத்தியமில்லை. அல்லாஹ்விடம் கலப்பற்ற முறையில் அடிபணிந்தவாறு துஆ கேட்க வேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:** துஆவுடன்

அல்லாஹ்வின் அருளும் இருந்தால் அல்லது நமது முயற்சி அல்லது துஆவை விட அல்லாஹ்வே தனது பண்புகளை வெளிப்படுத்தியவாறு அருள்களை பன்மடங்கு அதிகமாக்கி வழங்குகின்றான் என்றால் பிறகு அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூறுவதும் அதை பறைசாற்றுவதும் முன்னரை விட அதிகமாக இருப்பது அவசியமாகும். இதுதான் பிறகு நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வைப் பற்றிய அன்பை உருவாக்குகிறது. அல்லாஹ்வின் அருளும் அருட்கொடைகளும் மேலும் அதிகமாகும் பொருட்டு அவனுக்குக் கட்டுப்படுவதற்கும் கீழ்ப்படிவதற்கும் ஓர் ஆர்வத்தை உருவாக்குகிறது. எனவே ஜெர்மனி மாநாட்டிலும் நிகழ்ச்சிகளிலும் அல்லாஹ்வின் அருள்கள் வெளிப்பட்டன. மேலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச்செய்தி இந்த நாட்களில் பரந்த அளவில் நாட்டின் பரந்த பகுதிகளில் பரவியிருக்கிறது. இது அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூற வேண்டும்; குறிப்பாக ஜெர்மனி ஜமாஅத் மிக அதிகமாக நன்றியுள்ளவர்களாக வேண்டும் என்பதன் பக்கம் நமக்கு கவனமூட்டுகிறது. அல்லாஹ்வின் அருள் அதிகமாகிக் கொண்டே செல்வதற்காக அந்த அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு அல்லாஹ்வின் பக்கம் அதிகமாக குனிய வேண்டும்.

உள்ளங்கள் வரை சென்றடைவது அல்லாஹ்வின் அருள் இல்லாமல் இயலாது. அல்லாஹ்வின் விருப்பமின்றி எந்த மனிதனும் எவருடைய உள்ளம் வரையும் சென்றடைய முடியாது. **மனிதன் இலட்சக்கணக்கான முயற்சிகள் செய்தாலும் அல்லாஹ்வின் விருப்பமில்லையென்றால் எந்தத் தூதுச் செய்தியும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது.** சில நேரத்தில் ஆர்வத்துடன் சொற்பொழிவாற்றுபவர்களின் சொற்பொழிவுகளும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஒரு சாதாரணமான, பொதுவாக புரியும் வகையில் பேசுவது தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனவே இந்தக் காட்சிகள் நமக்கு ஆண்டு மாநாட்டில் தென்பட்டன. இங்கு அஹ்மதியல்லாத விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களின் தாக்கங்களில் இது தென்பட்டன. பலர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்தனர். அது பற்றி சுருக்கமாக நான் உங்களுக்கு முன்னால் எடுத்துக் கூறுவேன். ஜெர்மனியில் அல்லாஹ்வின் அருளால் கிழக்கு ஐரோப்பா, அண்டை நாடுகளிலிருந்து பலர் ஆண்டு மாநாட்டில் வந்திருந்தனர். அஹ்மதியல்லாத பலரும் முஸ்லிம்கள் அல்லாத பலரும் வருகை தந்திருந்தனர். அவர்கள் அஹ்மதிகளுடன் உள்ள தொடர்பின் காரணமாக உண்மையைக் கண்டறிவதற்காக வந்திருந்தனர். பிறகு காலத்தின் இமாமுடைய அடிமைகளின் தாக்கம் எந்த அளவுக்கு அவர்களின் மீது ஏற்படுகிறதென்றால், அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பைஅத் செய்து விடுகின்றனர். அவர்கள் அனைவருடனும் சந்திப்பும் நடைபெற்றது. கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது. சில தாக்கங்களைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன்.

அல்பானியாவிலிருந்து 16 பேர் வந்திருந்தனர். மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்த்து 2 பேர் பைஅத் செய்து விட்டனர். ஒரு நண்பர் எர்வின் ஸேபா **(Ervin Xhepa)** சாஹிப் தனது மனைவியுடன் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்தார். இவர்கள் இருவரும் சட்டத் துறையுடன் தொடர்புள்ளவர்கள். இவர் அஹ்மதியாவார். ஆனால் இவரது மனைவி மாநாட்டில் கலந்து கொளவதற்கு முன்னர் பைஅத் செய்யவில்லை. ஆனால் மாநாட்டில் கலந்து கொண்டு பின்னர் சந்தித்து அவரும் பைஅத் செய்து விட்டார். அல்ஹம்து லில்லாஹ். மாநாட்டின் அநுபவங்கள் மிகவும் அசாதாரணமானவையாக இருந்தன என அவர் கூறினார். அதனால் அன்பு, மனத்தூய்மை, தன்னலமற்ற தொண்டு ஆகியவற்றைப் பார்க்க முடிந்தது என்றார்.

அவ்வாறே இப்ராஹீம் துர்ஷிலா **(Ibrahim Turshilla)** சாஹிப் சந்திப்பின்போது நானும் அஹ்மதியாகிறேன் எனக் கூறியவாறு பைஅத் செய்து

விட்டார். அவர் கூறுகிறார்: நான் இந்த தீர்மானத்தை எடுப்பதற்கு மிகக் காலதாமதம் செய்து விட்டேன். ஆனாலும் இன்று நான் முழு உறுதியுடன் இணைகின்றேன். மேலும் எனது தீர்மானம் மிகவும் சரியானதாகும்.

கோசோதோவிலிருந்து வந்திருந்த அக்ரோன் **(Agron)** சாஹிப் கூறுகிறார்: நான் சென்ற ஆண்டும் வந்திருந்தேன். ஆனால் சென்ற ஆண்டை விட மாநாட்டின் ஏற்பாடுகளில் அசாதாரணமான பரந்த நிலையையும் அதிக மாற்றங்களையும் உணர்கின்றேன்.

மெசோடோனியாவிலிருந்து வந்திருந்த ஒரு விருந்தினர்,மாநாட்டில் கலந்து கொண்டு அதன் நினைவுகளுடனேயே திரும்பிச் செல்கிறேன் என்றார். மேலும் மாநாட்டின் ஏற்பாடுகள் எப்படி இருந்தனவென்றால், இத்தகைய ஏற்பாடுகளை எந்தவொரு நிறுவனமும் மிகவும் கடினமாகத்தான் நிறைவேற்ற முடியும் என்றார். இன்னும் சொல்வதென்றால், **ஒரு பெரிய நாடும் இந்த தகுதியான நிகழ்ச்சியை நடத்த முடியாது என்றுகூறினார்.** பிறகு மெசெடோனியாவிலுள்ள ஒருவர், வாழ்நாளில் முதல் முறையாக இவ்வளவு நல்ல மக்களை சந்தித்துள்ளேன். எனக்கு இங்கு கிடைத்த இஸ்லாம் பற்றிய தூதுச் செய்தியினால் நான் மிகவும் தாக்கத்திற்குள்ளாகியிருக்கிறேன் என்றார். மெசெடோனியாவிலிருந்து வந்திருந்த இன்னொருவர் மாநாட்டில் முதல்முறையாக கலந்து கொண்டுள்ளேன்; எனக்கு இப்போது கிடைத்த இஸ்லாத்தின் தூதுச் செய்திதான் எனக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனக்கு எல்லாம் புதிதாக இருந்தது. **இஸ்லாத்தில் இப்படிப்பட்ட ஜமாஅத்தும் இருக்கிறது என்பது எனக்குக் தெரியாதிருந்தது என்றார்.**

மெசெடோனியாவின் குழுவைச் சேர்ந்த ஒரு விருந்தினர் திராகான் **(Dragan)** என்பவர் கூறுகிறார்: எனக்கு முஸ்லிகளுடன் முதல் முறையாக இவ்வளவு நெருக்கமான அறிமுகம் கிடைத்துள்ளது. மேலும் இஸ்லாமிய போதனைகள் தொடர்பான இப்படிப்பட்ட சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். இங்குள்ளவர்கள் எங்களை ஏற்கனவே அறிந்திருப்பது போன்று எங்களை வரவேற்றனர். போஸ்னியாவைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார்: முதலில் இவருக்கு ஜமாஅத்துடன் இவ்வளவு உறுதியான தொடர்பு இருந்ததில்லை. ஆனால் ஜமாஅத்தின் இமாமுடன் சந்திப்புக்குப் பிறகு அவரிடம் ஓர் அசாதாராணமான மாறுதல் ஏற்பட்டுள்ளது. ஜமாஅத்திற்காகவும் குறிப்பாக கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்காகவும் அவர்களின் உள்ளத்தில் கண்ணியம் அதிகமாகி விட்டது.

பிறகு கிரோஷேன் குழு வந்திருந்தது. அதன் ஒரு முக்கிய நபர் ஜோஸிபா **(Josipa)** சாஹிபா அவர்கள் கூறினார்கள்: ஆண்டு மாநாட்டில் வருவதற்கு முன்னர் நான் ஜமாஅத்தின் தலைவர் அவர்களின் **World Crisis and Pathway to Peace** (உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்) என்ற நூலைப் படித்தேன். அவ்வாறே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் அமைதிக்கான கருத்தரங்கில் கலீஃபத்துல் மஸீஹின் இரண்டு சொற்பொழிவுகளையும் படித்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் சில விவகாரங்களில் கடுமையான இயல்பைக் கொண்டவர் என எனக்கு தாக்கம் ஏற்பட்டது. ஆனால் இந்த தாக்கம் சந்திப்பின்போது அகன்று விட்டது. அதற்குப் பிறகு அவர் ஜமாஅத்தைப் பற்றி மேலும் அதிகமாக ஆய்வு செய்ய ஆரம்பித்து விட்டார்.

ஹென்க்ரியைச் சேர்ந்த ஒரு நண்பர் மேஸேய் **(Mezei)** என்பவர் மாநாட்டில் கலந்து கொண்டார். காவல்துறையில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியவர். இவர் மார்க்கத்தைப் பொருத்தவரை கிறித்தவராவார். இவர் தனது உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்: சிறியவர், பெரியவர் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு சலாம் கூறிக் கொண்டிருந்தனர். அன்புடன் சந்தித்திக் கொண்டிருந்தனர். எனக்கு அவர்களின் மொழி புரியவில்லை. ஆனால் அவர்களின் முகத்திலிருந்து, இவர்கள் அன்பை விநியோகித்துக் கொண்டிருகின்றனர் எனத்

தெரிந்தது. **நான் உலகத்தை கிழக்கிலிருந்து மேற்கு வரை பார்த்திருக்கிறேன். ஆனால் ஒருபோதும்இந்த மாதிரியான காட்சியைக் காணவில்லை.** பிறகு ஹென்க்ரியைச் சேர்ந்த காபோர் பீட்டர் **(Gobor Peter)** என்பவர் கூறுகிறார். இவரும் மார்க்கத்தைப் பொருத்தவரை யூதராவார். இவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் சில நேரத்தில் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். ஆனால் என்னுடன் அவருக்கு சந்திப்பு ஏற்பட்ட பிறகு அவர், ஹென்ரியில் ஜமாஅத்திற்கு எந்த விவகாரம் தொடர்பாக எந்தவொரு தேவை இருந்தாலும் ஒத்துழைப்பு தருவோம் என்றார். இதுதான் அல்லாஹ் உருவாக்கும் மாற்றங்களாகும்.

பிறகு ஜெர்மனியிலுள்ள ஒரு நண்பர் சுலைமான் சாஹிப் என்பவர். இவர் சென்டர் பப்லிக் ஆஃப் ஆஃப்ரிக்கா **(Centre Public of Africa)** வுடன் தொடர்புடையவராவார். இவர் கூறுகிறார்: எனக்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு கிடைத்தபோது 50 அல்லது 100 பேர் கொண்ட தப்லீக் கூட்டமாக இருக்கும்; அதில் சில விஷயங்கள் கூறப்படும்; சாப்பாட்டிற்கான ஏற்பாடு இருக்கும்; பிறகு ஒவ்வொருவரும் தத்தமது வீட்டிற்கு திரும்பி விடுவார்கள் என நினைத்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு எனது கொள்கை முற்றிலும் மாறி விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு கூடியிருக்கிறார்கள். மாநாட்டின் இந்த வசீகரத்திலிருந்து நான் முற்றிலும் மீண்டு வர முடியவில்லை. இங்குள்ள ஒவ்வொன்றும் வசீகரத்தைக் கொண்டதாக இருக்கிறது. மேலும் உங்களின் தப்லீக் செய்யும் விதமே வியற்பிற்குரியதாக இருக்கிறது. **இந்த விதத்திலேயே தப்லீக் செய்தால் பேறிழந்தவர் மட்டுமே மறுப்பார்.**

மோன்டீநீக்ரோவிலிருந்து வந்திருந்த ராகிப் ஷஃப்டாஃபீ **(Ragip Shaptafi)** சாஹிப் கூறுகிறார்: நான் சொற்பொழிவுகளைக் கேட்டேன். ஏற்பாடுகளைப் பார்த்தேன். அசாதாரணமானவையாக இருந்தன. அவ்வாறே அவர் கூறினார்: மேன்டீ நேக்ரூவில் முஸ்லிகளுக்கு மத்தியில் பொதுவாக அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை என்றே அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் எவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தை அருகிலிருந்து பார்க்கின்றாரோ அவருக்கு இது மவ்லவிகள் பரப்பிய பொய்யாகும் என்பது முற்றிலும் தெளிவாகி விடுகிறது.

பிறகு பெல்ஜியத்தில் வாழும் மராகிஷைச் சேர்ந்த ஒரு நண்பர் கூறுகிறார்: நான் எனது உணர்வுகளைஎடுத்துக் கூற முடியாது. எனது ஆன்மாவின் ஆழம் வரை தாக்கத்தை ஏற்படுத்திய அப்படிப்பட்ட ஆன்மீக காட்சியாகும். எனக்கு இங்கே இஸ்லாத்தின் சரியான படம் தெரிந்தது.

எட்க்ரோஸ் என்ற ஒரு மணவர் கூறுகிறார்: இங்கு வருவதற்கு முன்னர் எனக்கு எலக்ட்ரானிக் மீடியா மூலமாக இஸ்லாத்தைப் பற்றி பல தவறான கருத்து இருந்தது. அது குத்பாக்களைக் கேட்டு மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து எல்லாம் (தவறாக கேள்விப்பட்டதை விட) வித்தியாசமானதாக இருந்தது. இன்று நான் உண்மையான இஸ்லாத்தை உங்களின் மூலமாக பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

அப்துல்லாஹ் என்பவரின் தந்தை பல ஆண்டுகளாக அஹ்மதியாக இருக்கிறார்கள். இவர் தனது தந்தையுடன் ரஷ்யாவில் இருக்கிறார். ஆனால் படிப்புக்காக இவர் தற்போது ஹாலாந்தில் தங்கியிருக்கிறார். இவருடைய தந்தையின் மூலமாக இவருக்கு தப்லீக் நடந்து கொண்டிருந்ததுதான். ஆயினும் இன்னும் அவர் பைஅத் செய்யவில்லை. மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் எனக் கூறினார். அல்லாஹ் எனக்கு அடையாளத்தைக் காண்பித்து விட்டான் என்றார். அவர் கூறியதாவது, இரவில் நான் மிகவும் மன்றாடியவாறு அல்லாஹ்விடம் துஆ செய்தேன். மேலும் இரவில் துங்கும்போது கனவில் நான், பிரகாசமான எழுத்துகளில் அஹ்மதிய்யா என எழுதப்பட்டுள்ளது. அதிலிருந்து அசாதாரணமான ஒளி வெளிவந்து

கொண்டிருக்கிறது. மேலும் அவர் கூறுகிறார்: அவ்வாறே நான் (அதாவது ஹுஸூர் அவர்கள்) ஜெர்மனியிலிருந்து சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போதும் எனது உள்ளத்தில் நான் அடையாளத்தை வேண்டினேன். எனது உள்ளத்தில் அந்தோ! கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் நிற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற ஆசை தோன்றியது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மயக்கம் போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. அப்போதுதான் நான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் பக்கத்தில் நிற்கிறேன். அவர் கூறுகிறார்: இதற்குப் பிறகு எனக்கு உண்மை தெளிவடைந்து விட்டது. அவர் பைஅத் செய்து விட்டார்.

அவ்வாறே அரபு நாட்டைச் சேர்ந்த ஒரு நண்பர் கூறுகிறார்: ஒவ்வொரு முறையும் நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது எனது ஈமானில் அசாதாரணமாக அதிகரிப்புக்குக் காரணமாக அமைகிறது. ஒவ்வொரு முறையும் இறைவனின் எண்ணற்ற உதவிகளின் காட்சிகளைக் காண்கிறேன். ஆண்டு மாநாட்டில் இருக்கும்போது நான் சுவர்க்கத்தில் இருப்பதாக நான் உணர்கிறேன். இத்தாலியைச் சேர்ந்த ஒரு கிறித்தவ விருந்தினர் கூறுகிறார்: இது இத்தாலியின் ஓர் அமைப்பாகும். **Religion for Peace** என்பதன் பொதுச் செயலர் ஆவார். வாட்டிகன் சிட்டியில் மிகவும் அதிக செல்வாக்கு பெற்றவராவார். இவர் இத்தாலி திரும்பிச் சென்று கட்டுரை எழுதினார். அதை ஆயிரக்கணக்கானவர்கள் படிக்கின்றனர். அவருடைய ஒரு பத்திரிகை இருக்கிறது. அதில் அவர், ஆண்டு மாநாட்டின் காட்சி எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது என ஒப்புக் கொள்ள வேண்டியது ஏற்படுகிறது என எழுதியிருக்கிறார்.

மாநாட்டில் கலந்து கொட சேரீன் மருத்துவர் கூறுகிறார்: இப்படிப்பட்ட அமைப்பை நான் என் வாழ்க்கையில் பார்த்ததே இல்லை. நம்மால் ஆறு பேரை சமாளிக்க முடியாது. இங்கு 40 ஆயிரம் பேர்களை சமாளிப்பது சாதாரன விஷயமல்ல. நான் மனதார ஹஸ்ரத் சாஹிப் அவர்களையும் உங்களின் கலீஃபாவையும் மதிக்கின்றேன். நான் பராஹீனே அஹ்மதிய்யா நூலை முழுவதுமாக படித்திருக்கிறேன். இறைவன் மீது ஆணையாக! 19 ஆவது நூற்றாண்டில் இஸ்லாத்திற்கு பாதுகாப்பாக அரபு நாட்டிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ இப்படிப்பட்ட நூல் எழுதப்படவில்லை.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இவருடைய உள்ளத்தையும் திறந்தருள்வானாக. ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளால் அசாதாரணமான தாக்கங்கள் ஏற்படுகின்றன. அவற்றிலிருந்து மிகக் குறைவாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதுவும் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆண்டு மாநாடு நமக்கு ஆன்மீக, தர்பிய்யத் தொடர்பான முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகின்ற அதே நேரத்தில் எனக்கு மற்றவர்களுக்கு மத்தியிலும் உண்மையான இஸ்லாத்தை எடுத்து வைக்கும் நல்வாய்ப்புக்குக் காரணமாக அமைகின்றது. அவ்வாறே பைஅத்துகளும் நடக்கின்றன. கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் அதன் அருள்களிலிருந்து பயன் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் நம் அனைவரையும் உண்மையான நன்றி செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானகை.

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian, 143 516, Punjab**